بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 19/03/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு எடுத்துக்கூறப்பட்டு வருகின்றது. அன்னாரின் ஷஹாதத்திற்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்களைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

கிளர்ச்சியாளர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி இருந்தார்கள். ஆயினும் அன்னாரின் உடலை அடக்கம் செய்வதிலும் கூட அவர்களுக்கு ஆட்சேபனை இருந்தது. மூன்று நாட்கள் வரை அன்னாரை அடக்கம் செய்ய முடியாமல் போனது. இறுதியில் சஹாபிகளின் ஒரு கூட்டம் தைரியத்துடன் இரவு நேரத்தில் அன்னாரை நல்லடக்கம் செய்தது.

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தோட்டத்தில் நுழைந்தார்கள். மேலும் தோட்டத்தின் வாசலில் காவல் காப்பதற்கு எனக்கு கட்டளையிட்டார்கள். இதற்கிடையில் ஒருவர் வந்தார். உள்ளே வருவதற்கு அனுமதி வேண்டினார். அவரை உள்ளே அனுமதியுங்கள். அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்குங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருந்ததை நான் கண்டேன். பின்னர் இன்னொரு நபர் வந்தார். அவர் அனுமதி வேண்டியபோது, அவரை உள்ளே அனுமதியுங்கள். அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களாக இருந்ததை கண்டேன். பின்னர் மற்றுமொரு நபர் வந்தார். அனுமதி வேண்டினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சற்று நேரம் வரை மௌனமாக இருந்தார்கள். அதன் பிறகு, அவரை உள்ளே வர அனுமதியுங்கள். அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை கூறுங்கள்; எனினும் அவருக்கு ஒரு மாபெரும் துன்பம் வந்தடையும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்பதை நான் கண்டேன்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது மலையின் மீது ஏறினார்கள். அப்போது அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோரும் இருந்தனர். உஹது மலை அசையத் தொடங்கியது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஹது மலையே! நீ அமைதியாக இரு என்றார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது அதன் மீது தனது பாதங்களைக் கொண்டு தட்டினார்கள் என்று நான் கருதுகிறேன். உன்மீது ஒரு நபியும், ஒரு சித்தீக்கும், இரண்டு ஷஹீதுகளும் இருக்கின்றார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குழப்பத்தைக் குறித்து எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: இந்த நபர் அந்த குழப்பத்தில் அநீதியிழைக்கப்பட்ட சூழலில் கொல்லப்படுவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் குறித்து சைகை செய்தவாறு இதனைக் கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் தாங்கள் எங்களுக்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி சிறிது கூறுங்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், அந்த நபர் எப்படிப்பட்டவராக இருந்தார் என்றால் அவர் அல்லாஹ்வின்

பார்வையிலும் துன் நூரைன் - இரண்டு ஒளிகளை உடையவர் ஆக இருந்தார். மேலும் நம் அனைவரை விடவும் மிகவும் கருணை காட்டக்கூடியவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் பற்றிய செய்தி கிடைத்தபோது அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்த கயவர்கள் அன்னாரை கொலை செய்து விட்டனர். ஆனால் மக்களில் எல்லோரையும் விட மிக அதிகமாக கருணை காட்டக் கூடியவராகவும், மிக அதிகமாக தனது இறைவன் மீதான அச்சத்தை மேற்கொண்டவராகவும் அன்னார் இருந்தார்கள்.

அல் இஸ்தீஆப் - இல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் கண்ணியமும், கம்பீரமுமிக்க எனது இறைவனிடத்தில் இவ்வாறு துஆ செய்தேன். அதாவது, எனது மருமகன்களில் எவரையும் அல்லது நான் யாருக்கு மருமகனாக இருப்பேனோ அவரையும் நெருப்பில் நுழையச் செய்யாமல் இருப்பாயாக.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் உருவத் தோற்றம் தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் குள்ளமானவராகவும் இருக்கவில்லை; மிக உயரமானவராகவும் இருக்கவில்லை. அன்னாரின் முகம் அழகானதாகவும், தோல் மென்மையானதாகவும், தாடி அடர்த்தியானதாகவும் நீண்டதாகவும், கோதுமை நிறம் உடையவராகவும், வலிமையான உடல்வாகு கொண்டவர்களாகவும், அகன்ற தோள்பட்டை கொண்டவராகவும் இருந்தார்கள். தலைமுடி அடர்த்தியானதாக இருந்தது. அன்னார் மருதாணியினால் தாடிக்கு சாயமிட்டு வந்தார்கள். மூஸா பின் தல்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: **ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அனைத்து மக்களை விடவும் மிக அழகானவராக இருந்தார்கள். அஷ்ரா முபஷ்ஷிரா அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே சொர்க்கத்திற்குரிய நற்செய்தி பெற்ற பத்து நபர்களில் ஒருவராக அன்னார் இருந்தார்கள்.**

சொர்க்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் நெருக்கமாக இருப்பது தொடர்பாக அறிவிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஒவ்வொரு நபிக்கும் ஒரு தோழர் இருக்கின்றார். எனது தோழர் அதாவது சொர்க்கத்தில் எனது தோழராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இருப்பார்கள். ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு வீட்டில் முஹாஜிரீன்களின் ஒரு கூட்டத்தினருடன் அமர்ந்திருந்தோம். அதில் அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ, தல்ஹா, ஸுபைர், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் மற்றும் சஅத் பின் அபீ வக்காஸ் ஆகியோர் இருந்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒவ்வொரு நபரும் தமக்கு இணையான நபருடன் எழுந்து நில்லுங்கள் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் எழுந்து நின்று விட்டார்கள். மேலும் அவர்களை கட்டியணைத்தார்கள். பின்னர், اَنْتَ وَلِيِّ فِي الدُّنْيَاوَوَلِيِّ فِي الْاٰخِرَةِ நீங்கள் இவ்வுலகிலும் மறுமையிலும் எனது நண்பர் ஆவீர்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜிது நபவியின் விரிவாக்கப் பணி நடைபெற்றது. அதிலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு பங்கு பெறும் நற்பாக்கியம் கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 1 ஆம் ஆண்டு அதாவது அக்டோபர் 622 ஆம் ஆண்டு இறுதியில் தனது அருளுக்குரிய கரத்தால் மஸ்ஜித் நபவிக்கான அடிக்கல்லை வைத்தார்கள். மஸ்ஜிது நபவியின் கட்டுமானப் பணி ஹிஜ்ரி 1 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் அதாவது ஏப்ரல் மாதம் 623 ஆம் ஆண்டு முழுமை பெற்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜிது நபவியின் முதல் விரிவாக்கப்பணி ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் அதாவது ஜூன் 628 ஆம் ஆண்டு நடந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபர் போரிலிருந்து வெற்றி பெற்று திரும்பி வந்தபோது மஸ்ஜிது நபவியை விரிவாக்கம் செய்யுமாறும் புதிதாக கட்டுமானப் பணியை மேற்கொள்ளுமாறும் கட்டளையிட்டார்கள். வடக்குப் பக்கத்தில் ஓர் அன்ஸாரி சஹாபியின் வீடு இருந்தது. அவருக்கு தனது வீட்டைக் கொடுப்பதற்கு சற்று தயக்கம் இருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது சொந்த பணத்திலிருந்து பத்தாயிரம் தீனார்கள் கொடுத்து அந்த வீட்டை விலைக்கு

வாங்கினார்கள். மேலும் அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வீட்டை பள்ளிவாசலுடன் இணைத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் இரண்டாவது முறையாக ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு மஸ்ஜிது நபவியின் விரிவாக்கம் நடைபெற்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 24 ஆம் ஆண்டு கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது மக்கள் அவரிடம் மஸ்ஜிது நபவியை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள். பள்ளி வளாகம் குறுகியதாக இருப்பதாக புகார் செய்தார்கள். எனவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சஹாபிகளிடம் ஆலோசனை செய்தார்கள். அனைவரும் பழைய பள்ளிவாசலை இடித்து விட்டு அந்த இடத்தில் புதிய பள்ளிவாசலை கட்ட வேண்டும் என்ற கருத்தையே கூறினார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் லுஹர் தொழுகைக்குப் பிறகு மேடையில் ஏறி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அன்னார் கூறினார்கள்: நான் பள்ளிவாசலை இடித்து விட்டு இந்த இடத்தில் புதிய பள்ளிவாசலை கட்ட விரும்புகின்றேன். மேலும் நான் சாட்சி கூறுகின்றேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவினால் இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். எவர் பள்ளிவாசல் கட்டுவாரோ அல்லாஹ் அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு வீட்டை வழங்கி விடுகின்றான். எனக்கு முன்பு ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னாரின் கரங்களின் மூலமாக மஸ்ஜிது நபவியின் விரிவாக்கப் பணி நடைபெற்றது. புதிய கட்டுமானப் பணி ஒரு முன்னுதாரணமான பணியாகும். சிறந்த ஆலோசனைகளைக் கூறும் சஹாபிகளிடம் நான் ஆலோசனை செய்தேன். அவர்கள் அனைவரின் ஒன்றுபட்ட கருத்து என்னவென்றால், மஸ்ஜிது நபவியை இடித்து விட்டு அதை மீண்டும் கட்ட வேண்டும் என்பதாகும்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் புதிய பள்ளிவாசல் கட்டுமானத் திட்டத்தை முன் வைத்தபோது சில சஹாபிகள் அந்த விவகாரத்தில் தனது சில அச்சங்களை தெரிவித்தனர். பள்ளிவாசலை இடிக்கக் கூடாது என்பது அவர்களின் கருத்தாக இருந்தது. தமது கருத்தை மக்களிடையே ஏற்றுக் கொள்ளச் செய்வதில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வெற்றியடைந்தபோது அன்னார் ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 29 ஆம் ஆண்டு அதாவது நவம்பர் 649 ஆம் ஆண்டு பணியை துவக்கி விட்டார்கள். புதிய கட்டுமானப் பணிக்காக வெறும் பத்து மாதங்களே செலவாயின. ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டு முஹர்ரம் 1 ஆம் தேதி மஸ்ஜிது நபவி தயாராகி விட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அனைத்துப் பணிகளையும் தானே மேற்பார்வை செய்து வந்தார்கள். பகல் நேரத்தில் எப்போதும் நோன்பு நோற்று வந்தார்கள். இரவு நேரத்தில் தூக்கம் வந்து விட்டால் பள்ளிவாசலிலேயே உறங்கி வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவியை தெற்குப் பக்கம் கிப்லாவை நோக்கி விரிவுபடுத்தினார்கள். மேலும் இன்று இருக்கும் இடம் வரை கிப்லாவின் சுவரை கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் பள்ளிவாசலில் கதவுகளின் எண்ணிக்கை 6 ஆக இருந்தது. முதல் முறையாக மஸ்ஜிது நபவியில் கற்களின் வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் வெள்ளையடிக்கப்பட்டது.

ஹஸ்ரத் காரிஜா பின் ஸைதின் கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவியின் கிழக்கு மற்றும் மேற்கு பக்க சுவர்களில் ஜன்னல்களை வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கால கட்டத்தில் பேரித்த மரக்கிளைகளைக் கொண்ட தூண்கள் எந்தெந்த இடங்களில் இருந்தனவோ அந்தெந்த இடங்களிலேயே அவற்றிக்குப் பதிலாக புதிய தூண்கள் வைப்பதற்கு சிறப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் மஸ்ஜிது நபிவியின் மிஹ்ராபில் நின்று தொழுகை நடத்தியபோது நடைபெற்றது. எனவே எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருப்பதை உறுதிபடுத்துவதற்காக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மிஹ்ராபின் இடத்தில் ஒரு குறுகிய வளையத்தை அமைத்தார்கள். அது செங்களால் கட்டப்பட்டிருந்தது. தொழுகையாளிகள் தம் இமாமை காணும் வகையில் அதில் ஜன்னல்கள் அமைக்கப்பட்டிருந்தன. மஸ்ஜிது நபவியில் கட்டப்பட்ட முதலாவது பாதுகாப்பு வழிமுறையாக அது இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஹஸ்ரத் சுலைமான் அவர்களுடன் ஒப்பீடு செய்து பார்க்கின்றேன். அவருக்கும் கட்டுமான கலையில் மிகவும் ஆர்வம் இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “பள்ளிவாசல் என்பது வேலைப்பாடுகள் கொண்டதாகவும், உறுதியான கட்டடமாகவும் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. மாறாக, நிலத்தில் பள்ளிவாசலுக்கான எல்லை வரையறுக்கப்பட வேண்டும். மேலும் மழை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக மூங்கில் கம்புகளால் கூரை அமைக்கப்படுவது போதுமானதாகும். இறைவன் செயற்கையை விரும்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பள்ளிவாசல் பேரீத்த மரத்தின் கிளைகளால் அமைக்கப்பட்டது. அவ்வாறே அது தொடர்ந்தது. பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதனை தனது காலத்தில் உறுதிவாய்ந்ததாக ஆக்கினார்கள். அன்னாருக்கு கட்டடக் கலையில் மிகுந்த ஆர்வம் இருந்தது. ஹஸ்ரத் சுலைமான் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பெயர்கள் ஒன்றுபடுகின்றன. இந்த அடிப்படையில் அன்னாருக்கு அந்த விஷயத்தில் அதிக ஆர்வம் இருந்தது என்று நான் கருதுகின்றேன்.”

முதலாவது இஸ்லாமிய கடற்படை ஹிஜ்ரி 28 ஆம் ஆண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் உருவாக்கப்பட்டது. அமீர் முஆவியா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கடற்போர் செய்த முதல் நபர் ஆவார்கள்.

அறிவிப்பில் வருகின்றது: **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நல்லொழுக்கங்களில் எல்லோரையும் விட அதிகமாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒப்புமை பெற்றிருந்தார்கள்.**

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் உஸ்மான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகளை பார்ப்பதற்கு வருகை தந்தார்கள். அப்போது அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தலையை கழுவிக் கொண்டிருந்தார்கள். எனது மகளே! அபூ அப்தில்லாஹ் அதாவது உஸ்மான் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வீராக. ஏனென்றால் இவர் எனது சஹாபிகளில் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் எல்லோரையும் விட எனக்கு மிகுந்த ஒப்புமை கொண்டவராக இருக்கின்றார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் யஹ்யா பின் அப்துர் ரஹ்மான் பின் ஹாதிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் எனது தந்தையிடமிருந்து இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். அன்னார் கூறினார்கள்: நான் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளில் விஷயத்தை முழுமையாகவும், அழகிய முறையிலும் எடுத்துக் கூறுவதில் சிறந்தவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை விட வேறு எவரையும் கண்டதில்லை. இருந்தபோதிலும் அன்னார் மிக அதிகமாக பேசுவதிலிருந்து தவிர்ந்திருந்தார்கள்.**

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவியாகிய ருகய்யா பின்த் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சந்நிதானத்தில் ஆஜரானேன். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகள். அப்போது அன்னாரின் கரங்களில் சீப்பு இருந்தது. அன்னார் கூறினார்கள்: இப்போது தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்திருந்தார்கள். நான் சீப்பினால் அன்னாரின் தலையை சீவினேன். அப்போது அன்னார் என்னிடம் நீங்கள் அபூ அப்தில்லாஹ்வை அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை எவ்வாறு காண்கின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான் மிக நல்லவராக காண்கின்றேன் என்று கூறினேன். அதற்கு அன்னார், அவரிடம் மிகவும் கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுங்கள். ஏனென்றால் எனது சஹாபிகளில் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் எல்லோரையும் விட அவர் எனக்கு மிகவும் ஒப்புமை உடையவராக இருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு இத்துடன் நிறைவு பெறுகிறது.

ஹுஸூர் அவர்கள் குத்பாவின் இறுதியில் ரப்வாவின் முஅல்லிமாகிய மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மது ரந்த் சாஹிப், இஸ்லாமாபாத் மாவட்டத்தின் முன்னாள் அமீர் மதிப்பிற்குரிய முனீர் அஹ்மத் ஃபரக் சாஹிப், ராவல்பிண்டி மாவட்டத்தின் முன்னாள் அமீரும் Retired Brigadier-ஆன மதிப்பிற்குரிய முஹம்மது லத்தீஃப் சாஹிப், கிர்கிஸ்தானைச் சேர்ந்த மதிப்பிற்குரிய கோனோக் பேக் ஒமுர் பேகுஃப் சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். மேலும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)